

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (17.3.2025) தலைமைச் செயலகத்தில், தென்னிந்திய பொறியியல் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் மிதுன் ராம்தாஸ், துணைத் தலைவர் ஆர்.அருண் மற்றும் நிர்வாகிகள், ஃபவுண்டரீஸ் டெவலப்மெண்ட் ஃபவுண்டேஷன் இயக்குநர் ஆர்.சரவணன், இந்திய பம்ப் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் இயக்குநர் கே.வி.கார்த்திக், இந்திய வார்ப்புத் தொழிலாளர்கள் நிறுவனத்தின் தலைவர் கே.வேலுசாமி ஆகியோர் சந்தித்து, தமிழ்நாடு அரசின் 2025–26 நிதிநிலை அறிக்கையில், கோவை மாவட்டத்தில் உயர் தொழில்நுட்ப பம்பு மோட்டார் உற்பத்திக்கான உயர்திறன் மையம் மற்றும் வார்ப்புத் தொழிலுக்கான உயர்திறன் மையம் தொழில் கூட்டமைப்பினரோடு இணைந்து டிட்கோ நிறுவனம் அமைக்கும் என்று அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.3.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அமைச்சர் தா.மோ.அன்பரசன், கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, உயரதிகாரிகள் அன்சுல் மிஸ்ரா, நா.காளிதாஸ், வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டுவரும்

# 15,455 அடுக்குமாடிக் குடியிருப்பு பணிகளை விரைந்து நிறைவேற்றுக!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் – அலுவலர்களுக்கு அறிவுரை!

**சென்னை, மார்ச் 19-**

**சென்னை மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் 15,455 அடுக்குமாடி குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகளை உரிய காலத்தில் முடிக்க வேண்டும் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (17.3.2025) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய திட்டப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர், வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் சென்னையில் 34 திட்டப் பகுதிகளில் 16,888 அடுக்குமாடி குடியிருப்புகளும், தமிழ்நாடு முழுவதும் இதர மாவட்டங்களில் 100 திட்டப் பகுதிகளில் 30,041 அடுக்குமாடி குடியிருப்புகளும் என மொத்தம் 134 திட்டப்பகுதிகளில் ரூ.5,330 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட 46,929 அடுக்குமாடி குடியிருப்புகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

தற்போது சென்னை மற்றும் சுற்றியுள்ள 48 திட்டப் பகுதிகளில் 15,455 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டு வருகின்றன. இக்குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்படவுள்ளன. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், தார் சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தால் கட்டப்பட்டு வரும் 15,455 அடுக்குமாடி குடியிருப்புகள் உரிய காலத்திற்குள் முடிக்கப்பட்டு, முதலமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு வீடுகளை வழங்கும் வகையில் அலுவலர்கள் தொடர்ந்து ஆய்வு மேற்கொண்டு கட்டுமான பணிகளை கண்காணித்திட தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், வாரிய திட்டப்பகுதிகளில் மின் இணைப்பு, குடிநீர் இனைப்பு, கழிவுநீர் இணைப்பு ஆகிய பணிகளை ஒருங்கிணைத்து உரிய நேரத்தில் முடிக்க வேண்டும் என்று தெரிவித்தார். புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் குடியிருப்புகளில் பணிகளை குறித்த காலத்திற்குள் முடிக்கவும் துணை முதலமைச்சர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### புதுக்கோட்டை வடக்கு: விராலிமலை மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில்

# கழகத் தலைவர் - முதல்வர் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

## இரா.சபாபதி மோகன் சிறப்புரை! அ.இளங்குமரன் தலைமை!

*புதுக்கோட்டை, மார்ச் 19-*

*புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை மேற்கு ஒன்றிய திமுக சார்பில் கழகத் தலைவர் தளபதி அவர்களின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம் விராலிமலை செக்போஸ்டில் 14.3.2015 வெள்ளிக்கிழமை மாலை 5 மணி அளவில் விராலிமலை மேற்கு ஒன்றிய செயலாளர் அ.இளங்குமரன் தலைமையில் நடைபெற்றது.*

*கழக கொள்கைப்பரப்பு செயலாளர், முன்னாள் துணைவேந்தர் முனைவர் இரா.சபாபதி மோகன் சிறப்புரையாற்றினார்.*

*மேலும் நிகழ்வுகளில் மு.பி.மணி, கே.ஆர்.என். போஸ், தென்னலூர் எம். பழனியப்பன், கவிஞர் சௌமா,*

*மாத்தூர் எம்.பாலமுருகன், கை.பழனிச்சாமி, சொ.தமிழினியன், இரா. மூக்கையா, என்.எஸ்.கே. நல்லதம்பி, பெ.கண்ணன், இரா.பாலசுப்பிரமணியன், ந.வீராச்சாமி, சி.சி.செல்வம், மு.க.சண்முகசுந்தரம், தேன்கனிப்பட்டி ராஜா, ஏசி செல்வராசு, மூ.சுப்பையா, கே.ரெங்கராஜ், ஆ. பழனிச்சாமி, எம்.ஆர். செல்வம், சே.கிட்டு, ஆர். பி.எஸ். கார்த்திகேயன், பி.ஆறுமுகம், ஆ.விஜயரகு, ரெ.கிருஷ்ணன், பெ. குமார், பெ.கோபிநாதன்,*

*ப. அழகர்சாமி, மு. சுரேஷ்குமார், ம.சந்தோஷ் குமார், பா.செல்வம், த.சத்தியராஜ், எல்.ஜி.சேகர், சி. லட்சுமணன், எம்.பி வடிவேல், பொ.வீராச்சாமி, மா.கார்த்திகேயன். ச.நாகராஜ், செ.தயாநிதி, இரா. மணிகண்டன் மற்றும் மாவட்ட,ஒன்றிய, நகர, பேரூர் வட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*முடிவில் முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் எம்.ஆர்.அன்பழகன் நன்றி கூறினார்.*



தொழில் வளம் இல்லாத, கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதிக்கு சிப்காட் உருவாக்கப்படும் என்கிற ஆணையை வழங்கிய தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், தொழில் துறை அமைச்சர், முனைவர் டி.ஆர்.பி.ராஜாவுக்கும், மாவட்ட அமைச்சருக்கும் கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி பொதுமக்களின் சார்பாகவும் கழகத்தினர் சார்பாகவும் நன்றியினை தெரிவித்து, மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்வில், கே.ஆர்.என்.போஸ், டி.செல்வம், ஒன்றிய செயலாளர்கள் என்.சேட்டு, ஓ.எஸ்.வெங்கடாசலம், சி.சண்முகம், கீரனூர் நகர செயலாளர் பி.அண்ணாதுரை உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுக்கு அதிக நிதி ஒதுக்கும் ஒன்றிய அரசு

# முற்போக்குச் சிந்தனை கொண்ட தமிழ்நாட்டைத் தண்டிப்பது ஏன்?

## மாநிலங்களவையில் – வழக்கறிஞர் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 19-

2025ஆம் ஆண்டுக்கான ஒன்றிய அரசின் பட்ஜெட் மீதான விவாதத்தில் நாடாளுமன்ற மாநிலங்களவையில் திமுக எம்.பி. இரா. கிரிராஜன் உரையாற்றியபோது, 2025-26ல் ஒன்றிய அரசாங்கம் ரூபாய். 50,65,345 கோடி செலவழிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது என்பது கடந்த நிதியாண்டை விட 7.4 சதவிகிதம் அதிகம் என்றாலும். கடந்த ஆண்டை விட வருவாய் செலவு 6.7 சதவிகிதமும், மூலதனச் செலவு 10.1 சதவிகிதமும் அதிகரிக்கும் என கூறியுள்ளார்.

அதிக மக்கள்தொகை கொண்ட சில பெரிய மாநிலங்கள் ஒன்றிய அரசிடமிருந்து பெரும்பங்கை பெறுகின்ற நிலையில், உற்பத்தி, முற்போக்கு சிந்தனை, மக்களின் ஜனநாயக உரிமை ஆகியவற்றை முதன்மையாக வைத்திருக்கும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் தண்டிக்கப்படுவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

ஒன்றிய அரசின் மொத்த வருவாயில் 60 சதவிகிதம் மகாராஷ்டிரா, தமிழ்நாடு போன்ற தென்னிந்திய மாநிலங்களில் இருந்து கிடைத்தாலும், அந்த மாநிலங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களுக்காக பணத்தைத் திரும்பப் பெறுமோ, என்பது பில்லியன் டாலர் கேள்வியாக உள்ளதாக குறிப்பிட்டுள்ள எம்.பி. கிரிராஜன், இந்த அரசு பதவியேற்ற 2014ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒன்றிய அரசால் ஆண்டுதோறும் துரோகம் இழைத்து வருவதாக குற்றஞ்சாட்டை முன்வைத்துள்ளார்.

**ஒன்றிய கருவூலத்துக்கு தமிழ்நாட்டின் பங்களிப்பு!**

நிதிப் பற்றாக்குறையை வெகுவாகக் குறைத்துவிட்டதாக ஒன்றிய அரசு பெருமிதம் கொள்கிறது. ஆனால் மகாத்மா காந்தி தேசிய ஊரக போன்ற வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்திற்கான (MGNREGA) ஒதுக்கீட்டில் பெரும் குறைப்பை செய்துள்ளதையும், இதை இந்தியர்கள் தாங்கிக் கொள்ள வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்ட கிரிராஜன், இது செருப்புக்கு தகுந்தபடி காலை வெட்டுவது போன்றது குறிப்பிட்டுள்ளார்.

ஒன்றிய கருவூலத்திற்கு தமிழகத்தின் பங்களிப்பு அதிகமாக இருந்தாலும் தமிழ்நாட்டிற்கான பல்வேறு திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியை குறைத்து தமிழ்நாட்டு மக்களின் விருப்பத்திற்கு நிதி அமைச்சர் துரோகம் செய்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும் என சாடியுள்ளார்.

நாட்டின் பரப்பளவில் 4 சதவிகிதமும், மக்கள் தொகையில் 6 சதவிகிதமும் கொண்டிருந்தாலும் தமிழ்நாடு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9 சதவிகிதத்தை வழங்கும் முற்போக்கான மாநிலமாக இருந்தாலும், ஒன்றிய அரசிடமிருந்து வெறும் 25 சதவிகிதம் மட்டுமே பெறப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளார்.

ஒன்றிய அரசின் இரட்டை இஞ்சின் சர்க்கார் அமலில் இருப்பதாக கூறும் சில பெரிய மாநிலங்கள் GDPல் எவ்வளவு பங்களிப்பை அளிக்கிறது என்பதையும், அந்த மாநிலங்களுக்கு ஒன்றிய அரசு எவ்வளவு கூடுதல் நிதி அளிக்கின்றன என்பதையும் நிதி அமைச்சர் தெளிவுபடுத்த வேண்டுமென எம்.பி. கிரிராஜன் வலியுறுத்தி பேசியுள்ளார்.

ஏழை, தாழ்த்தப்பட்ட மற்றும் நடுத்தர மக்களின் நலன்களின் சமரசம் செய்யாத முற்போக்கான, மக்கள் நலன் சார்ந்த ஒரு பட்ஜெட்டை எப்படி தாக்கல் செய்ய வேண்டும் என்பதை தமிழ்நாடு அரசின் நிதி அமைச்சரிடமிருந்து ஒன்றிய அரசின் நிதி அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புவதாகவும் கூறியுள்ளார்.

**தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் திட்டங்கள்!**

தமிழ்நாடு அரசு ரூபாய். 3,31,569 கோடி வருவாய் வரவு வரும் என கணிக்கப்பட்டுள்ளதாகவும். அதில் தமிழ்நாட்டின் சொந்த வருவாய் 75.3 சதவிகிதமும், மீதமுள்ள 24.7 சதவிகிதம் ஒன்றிய வரிகளில் மற்றும் ஒன்றிய அரசின் உதவியில் இருந்து வருவதாகவும் கிரிராஜன் விளக்கம் அளித்துள்ளார்.

2025-26ஆம் நிதியாண்டில் தமிழ்நாட்டு அரசாங்கத்தின் வரி வருமானம் 14.6 சதவிகிதம் அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டதுடன், தமிழ்நாடு அரசின் செலவினம் 2025-26ல் ரூ. 4.39,293 கோடியாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளதாகவும், கடந்த ஆண்டை விட இது 9.95 சதவிகிதம் அதிகமாகும் என்றும், இதன் பெரும்பகுதி மக்களுக்கான பல்வேறு நலத் திட்டங்களுக்காக குறிப்பாக ஏழைகள் மற்றும் விளிம்புநிலை மக்களுக்கு செலவிடப்படுவதாக தமிழ்நாட்டு அரசின் நடவடிக்கையை சுட்டிக்காட்டி பேசியுள்ளார்.

நிதிப்பற்றாக்குறையைக் குறைப்பதற்காக மூலதனச் செலவைக் குறைத்துள்ள ஒன்றிய அரசு,



மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாத திட்டத்திற்கான ஒதுக்கீட்டைக் குறைத்துள்ளதே தவிர, GST மற்றும் பெட்ரோல் மற்றும் டீசல் மீதான வரிகளைக் குறைக்கக் கூடாது என முடிவெடுத்திருப்பது இந்திய மக்களுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய அநீதியாகும் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

பாஜக அரசு ஆட்சியில் உள்ள கடந்த 10 ஆண்டுகளில், உணவு பணவீக்கம் 6.18 சதவிகிதம் கல்வி பணவீக்கம் 11 சதவிகிதம், சுகாதார பணவீக்கம் 14 சதவிகிதங்களாக இருப்பதாக புள்ளிவிவரங்களை சுட்டிக்காட்டியுள்ள எம்.பி. கிரிராஜன், இதனால் இந்திய குடும்பங்களை முடங்கியுள்ள தாக வேதனையை வெளிப்படுத்தியுள்ளார்.

**சாதித்துக் காட்டும் தமிழ்நாடு அரசு!**

குடும்ப சேமிப்பு 25 சதவிகிதத்திலிருந்து 15 ஆகக் குறைந்துள்ளது என்றும், தனிநபர் செலவினம் என்பது கிராமப்புறங்களில் 4,226 ரூபாயாகவும், நகர்ப்புறங்களில் 6,996 ரூபாயாகவும் உள்ளன எனவும், ஒன்றிய அரசால் இதை சாதிக்க முடியாது என்றும், தமிழ்நாடு போன்ற முற்போக்கான மாநிலங்களின் பங்களிப்புகளிலிருந்துதான் சாதிக்க முடியும் என்றும் விளக்கம் அளித்துள்ளார் திமுக எம்.பி. கிரிராஜன்.

தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் பீகாரை விட 5 மடங்கும், உத்தரபிரதேசத்தை விட 3 மடங்கும், மொத்த இந்திய நாட்டை விட 2 மடங்கு அதிகம் என்றாலும், கல்வி, ரயில்வே, உள்கட்டமைப்பு போன்றவற்றுக்கு உரிய நிதியை வழங்காமல் ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மக்களுக்கு சவால் விடுவதாக கடும் அதிருப்தியை கிரிராஜன் பதிவு செய்துள்ளார்.

இந்தியாவில் மணிப்பூரை விட வேறு எந்த மாநிலமும் வன்முறை மற்றும் கொலைகளை கண்டிராத நிலையில், பிரதமர் நரேந்திர மோடி கடந்த 3 ஆண்டுகளில் உலகம் முழுவதும் பயணம் செய்தாலும், ஒரு முறை கூட மணிப்பூருக்கு செல்லும் மனமோ, இரக்கமோ, பணிவோ இல்லை என்பதுதான் மிகவும் பரிதாபத்திற்குரிய விஷயம் என வேதனை தெரிவித்துள்ள திமுக எம்.பி. கிரிராஜன், மணிப்பூருக்கு செல்லாமல் பிரதமரை எது தடுக்கிறது, யார் தடுக்கிறார், ஏன் மணிப்பூர் மக்களை சந்தித்து பேச முடியவில்லை என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பி உள்ளார்.

**மணிப்பூர் மக்கள் மனதில் உள்ள காயங்கள்!**

மணிப்பூர் விவகாரத்தில் வெறுமையான வார்த்தைகளை மட்டுமே பிரதமர் மோடி பேசிய நிலையில், நெருக்கடியை பாதுகாப்பாக கையாள ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என குற்றம்சாட்டியுள்ளார்.

பழங்குடியினப் பெண்கள் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்ட செய்தி பரவிய பிறகே நீதித்துறை தலையீட்டிற்கு வழிவகுத்ததாகவும், அதனடிப்படையிலேயே ஒன்றிய அரசிடம் நீதிமன்றம் விளக்கம் கேட்டதையும் சுட்டிக்காட்டி பேசினார்.

மோசமான துரோகங்கள் மற்றும் அடிதடிகளுக்குப் பிறகு, மணிப்பூருக்கு எவ்வளவு பணம் கொடுத்தாலும், அந்த மக்களின் மனதில் உள்ள காயங்கள் ஒருபோதும் ஆறாது என்றும், சூழ்நிலையை சமாளிக்கத் தெரியாத ஒன்றிய அரசுக்கு இது ஒரு சான்றாக பதிவு செய்யப்படும் என்றும் கிரிராஜன் குற்றம்சட்டினார்.

இந்த மணிப்பூர் சம்பவம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசாங்கத்தின் இரண்டாவது பெரிய தவறு என வரலாற்றில் பதிவாகும் என சுட்டிக்காட்டியுள்ள திமுக எம்.பி. கிரிராஜன், குஜராத் முதல்வராக இருந்தபோது 2002ஆம் ஆண்டு நடந்த குஜராத் கலவரம் தான் முதல் பெரிய தவறு என்று குறிப்பிட்டு பேசியுள்ளார்.

**மணிப்பூர் சம்பவத்தில் மோடி அரசின் தவறுகள்!**

ஜனநாயகத்தையும், மக்களின் கூட்டாட்சி உரிமைகளையும் கொலை செய்யும் நபர்களால், எந்த நாட்டிலும் அமைதியையும் வளத்தையும் கொண்டு வர முடியாது என குறிப்பிட்டு நாடாளுமன்றத்தில் உரையாற்றிய திமுக எம்.பி. கிரிராஜன், வரலாறு அவர்களுக்கு மிக விரைவில் பெரிய பாடத்தை கற்பிக்கும் என எச்சரித்துள்ளார்.

### உத்திரமேரூர் சட்டமன்றத் தொகுதி

# வெண்குடி அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் க.சுந்தர் கேள்வி!

*சென்னை, மார்ச் 19-*

*சட்டப்பேரவையில் உத்திரமேரூர் தொகுதி வெண்குடி அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படுமா என்று க.சுந்தர் கேள்வி எழுப்பினார்.*

*இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விவாதம் வருமாறு :-*

***க.சுந்தர்:*** *உத்திரமேரூர் தொகுதி, வெண்குடி அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?*

***நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன்:*** *காஞ்சிபுரம் மாவட்டம், உத்திரமேரூர் தொகுதிக்குட்பட்ட வாலாஜாபாத் வட்டம், வெண்குடி கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி, நிதி நிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும்.*

***க.சுந்தர்:*** *இந்தப் பாலாறு என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்றுதான். தமிழ்நாட்டில் 222 கி.மீ. தூரம் ஓடுகிறது. குறிப்பாக காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டத்தில் 90 கி.மீ. நீளம் பாய்கிறது. அதில் உத்திரமேரூர் தொகுதியில் மூன்றில் ஒரு பங்கு 30 கி.மீ. தூரம் பாய்கிறது. ஏற்கெனவே, ராணிப்பேட்டை, புதுப்பாடியில் பகுதியில் ஒரு அணை கட்டப்பட்டிருக்கிறது. அந்த அணைக்குப்பிறகு பாலாற்றில் 66 கி.மீ-க்குப்பிறகுதான் ஒரு தடுப்பணை இருக்கிறது. இடையில் அவளூர், வெண்குடி பகுதியில் அந்தத் தடுப்பணையை அமைக்க வேண்டும். வாலாஜாபாத் பகுதி வளர்ந்து வரும் பகுதி. முதலமைச்சர் அவர்களுடைய சீரிய அறிவிப்புகளின் காரணமாக தொழிற்பேட்டைகள் நிறைந்த பகுதி, மக்கள் தொகை பெருக்கம் உள்ள பகுதி. ஏறத்தாழ 1 இலட்சம் குடிநீர் ஆதாரமும், அதைப் போல அவளூர் ஏரி என்பது ஆற்றைவிட மேடான பகுதியாக இருக்கிறது.*

*எனவே, அந்த அவலூர், ஆசூர் பகுதிகளில் 2,000 ஏக்கர் பாசன பகுதி இந்தத் தடுப்பணை மூலமாகப் பலனடையும். எனவே, நம்முடைய அமைச்சர் அவர்கள், ஏற்கெனவே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செங்கல்பட்டில் கடந்த 11ஆம் தேதி வந்து அந்த*



*மாவட்டத்திற்கு பல நல்ல திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். அதைப் போன்று காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு அவர்கள் வருகை தருகின்றபோது இந்த அவலூர் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுகின்ற திட்டத்தை அறிவிக்க அமைச்சர் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.*

***அமைச்சர் துரைமுருகன்:*** *உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று, இந்த அணை கட்ட வேண்டுமென்ற இடத்திலிருந்து 58 கிலோ மீட்டர் தூரத்தில் புதுப்பாடி அணையும், 8 கிலோ மீட்டர் தூரத்திலே பழைய சீவரம் அணையும் இருக்கிறது. இடையிலே எந்தவிதமான அணைகளும் கிடையாது. ஆகையால், உத்திரமேரூருக்குட்பட்ட வாலாஜாபாத் வெண்குடியில் பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்ட வேண்டியது அவசியமானது என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. சுமார் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 560 மீட்டர் நீளமும், 660 மீட்டர் நீளமும் 1.5 மீட்டர் உயரமும் கொண்ட தடுப்பணை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதுகுறித்து நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும். இந்த தடுப்பணை கட்டப்படும்பட்சத்தில் 12 கிராமங்களில் உள்ள கிணறுகள், ஆழ்துளை கிணறுகள் நிலநீர் செறிவூட்டப்படும். சுமார் 2,400 ஏக்கர் விவசாயம் நடைபெறும். எனவே தான் நான் முதலிலே சொன்னேன்; முன்னுரிமை அடிப்படையிலே இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.*

***க.சுந்தர்:*** *அமைச்சர் அவர்களுக்கு அந்தத் தொகுதி மக்களின் சார்பாகவும் என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போன்று, நம்முடைய விவசாயிகள் குறை கேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய தலைமையில் மாதந்தோறும் மூன்றாவது வெள்ளிக்கிழமையிலே நடைபெறுகின்றது. பெரும்பாலான விவசாயிகள் அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற ஏரிகளுடைய கலங்கல், மதகுகள் எல்லாம் பழுதுபட்டிருக்கின்றது. எனவே, அவற்றையெல்லாம் பராமரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள்தான் அதிக அளவிலே அந்த விவசாயிகள் குறை கேட்புக் கூட்டத்திலே வைக்கின்றார்கள். எனவே, காஞ்சிபுரம், செங்கல்பட்டு பகுதிகளிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட நீர்வளத் துறையைச் சார்ந்த ஏரிகள் இருக்கின்றன. ஆக, வருடத்திற்கு 100 ஏரிகளையாவது இது போன்ற பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள தேர்ந்தெடுத்து நிதி ஒதுக்கினால், அந்தப் பகுதி விவசாயிகள் பலனடைவார்கள். அதை அமைச்சர் அவர்கள் செய்ய முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

***அமைச்சர் துரைமுருகன்:*** *இப்போதுதான் அணை கட்டுவதற்கு 70 கோடி ரூபாய் ஒதுக்கீடு என்று சொன்னேன். பராமரிப்பு பணி கேட்கிறார். ஒன்று செய்யலாம். இந்த 70 கோடி ரூபாயை பராமரிப்பிற்கு வைத்துவிட்டு, தடுப்பணை கட்டுவதை நிறுத்தி விடலாம்.*

*இவ்வாறு விவாதம் நடைபெற்றது.*



சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் விரைவில் திறக்கப்படவுள்ள சர். ஜான் ஹுபர்ட் மார்ஷல் அவர்களது திருவுருவச் சிலை அமைக்கும் பணியை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் உயரதிகாரிகள் வே.ராஜாராமன், கவிதா ராமு, முனைவர் ந.அருள் ஆகியோர் உள்ளனர்.